<u>செய்தி வெளியீடு</u>

**செ.வெ. எண். 26** **நாள். 23.12.2017**

**எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல்–2017 வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. பிரவிண் பி. நாயர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெற்ற எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல்–2017 வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. பிரவிண் பி. நாயர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.12.2017) ரிப்பன் மாளிகை வளாகத்திலுள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

எண்.11, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் பணி 24.12.2017 அன்று காலை 8.00 மணி முதல் துவங்க உள்ளது. வாக்கு எண்ணிக்கை 14 இருக்கைகள் அமைத்து 18 முழுச்சுற்று மற்றும் ஒரு அரை சுற்று என மொத்தம் 19 சுற்றுகள் நடைபெறவுள்ளது. மத்திய அரசுத்துறையை சேர்ந்த 18 அலுவலர்கள் நுண்கண்காணிப்பு அலுவலர்களாகவும், தமிழ்நாடு வருவாய் துறையை சேர்ந்த 18 அலுவலர்கள் வாக்கு எண்ணும் அலுவலர்களாகவும் இவர்களுக்கு உதவியாக 18 வாக்கு எண்ணும் உதவியாளர்கள் உட்பட 200 அலுவலர்கள் இப்பணியில் ஈடுபட உள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையின் போது பணியாற்றும் விதம் குறித்தும், கட்டுப்பாட்டு கருவிகளை கையாளும் விதம் குறித்தும், வாக்கு எண்ணிக்கையினை கணக்கீடு செய்வது, எண்ணிக்கையினை பதிவு செய்வது, கட்டுப்பாட்டு கருவிகளுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை சரிபார்க்கும் விதம், வேட்பாளர்களின் முகவர்களுக்கு வாக்குப்பதிவு விவரங்களை தெரியப்படுத்தும் விதம், இதனை முழுமையாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. வாக்கு எண்ணும் பணி வெளிப்படையாகவும், ஒளிவுமறைவின்றி நடைபெறவும் மேலும், ஒவ்வொரு சுற்றின் முடிவுகளும் உடனுக்குடன் வெளியிடவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர்.லலிதா இ.ஆ.ப., அவர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷிணி இ.ஆ.ப., அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**